[2019] 3 எஸ்.சி.ஆர்.400

ஆரிஷ் அஸ்கர் குரேஷி

எதிர்

பாரித் அஹமது குரேஷி மற்றும் ஒருவர்

(குற்றவியல் மேல்முறையீட்டு எண். 387/2019)

பிப்ரவரி 26, 2019

முன்னிலை:

[மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.எப்.நரிமான்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. வினீத் சரன்]

குற்றவியல் நடைமுறைச்சட்டம், 1973 – பிரிவு 340 – திருமண உறவு தொடர்பான வழக்கு – மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் முன்பிணை மனு தாக்கல் செய்யப்பட்டதில், முன்வைக்கப்பட்டுள்ள சில பொருண்மைகள் தொடர்பாக – அவை பொய்யானவை என்று தெரிந்தே, சாதகமான உத்தரவை பெற வேண்டும் என்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது என குற்றம் சாட்டப்பட்டுள்ளது – மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது முன்கூட்டியே தாக்கல் செய்யப்பட்ட ஒன்று என அமர்வு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது – உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முன்பிணை மனுவில் அதே வாக்கியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன – அந்த வாக்கியங்கள் பொய்யானவை என உயர்நீதிமன்றம் கண்டறிந்ததால், சட்டப்பிரிவு 340 இன் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முதல் நோக்கில்

முகாந்திரம் உள்ளது எனவும், அதன் காரணமாக மேல்முறையிட்டாளரை குற்ற விசாரணைக்கு உட்படுத்தபட வேண்டும் என்பது நீதியின் நலனுக்கு தேவையான ஒன்று தீர்மானித்துள்ளது – மேல்முறையீட்டில், தெரிந்தே ஒரு பொய்யான வாக்கியம் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், அதை புறம்தள்ள இயலாத ஒரு சாட்சியத்தோடு ஒப்பிட்டு அதை பொய்யானது என முடிவு எட்டப்படவேண்டும் – இந்த வழக்கில் சாட்சியம் வழங்கப்படாததன் காரணமாக முன்பிணை மனுவில் முன்வைக்கப்பட்டுள்ள பொருண்மைகள் பொய்யானதா என்பதை சோதனை செய்ய இயலாது – பரிசீலனை செய்வதற்கு எந்த சாட்சியமும் இல்லாததால் உயர்நீதிமன்றம் எந்த சாட்சியத்தையும் பரிசீலனை செய்ய இயலவில்லை – விசாரணை அதிகாரியான காவல்துறை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட முதல் நிலை விசாரணை அறிக்கையினையும், உயர்நீதிமன்றம் வழங்கிய முன்பிணை உத்தரவினை மட்டுமே, உயர்நீதிமன்றம் கருத்தில் கொண்டுள்ளதால், அவை புறம்தள்ள இயலாத சாட்சியங்கள் அல்ல என்பதால், அவற்றிலிருந்து பொய் சாட்சியம் வழங்கப்பட்டதற்கான முதல் நோக்கு முகாந்திரம் இருப்பதாக தெளிவாக கூற இயலாது – உயர் நீதிமன்றத்தின் உத்தரவு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீட்டை அனுமதித்து இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்வு செய்தது.

தீர்வு: 1.1 அங்கு தெரிந்தே ஏதோ நடைப்பெற்றிருக்க வேண்டும். வேண்டுமென்று தெரிந்தே ஒரு பொய்யான வாக்கியம் முன்வைக்கப்பட்டிருந்தால், அதை புறம்தள்ள இயலாத ஒரு சாட்சியமான சான்றுகள் மற்றும் பிற ஆவணங்களோடு ஒப்பிட்டு அதை பொய்யானது என முடிவு எட்டப்படவேண்டும். இந்த வழக்கின் உண்மை நிலையைப்

பொறுத்தவரை, முன்பிணை விண்ணப்பத்தில் கூறப்பட்ட வாக்குமூலத்தில், இன்னும் ஆதாரங்கள் வழங்கப்படாததால், நிருப்பிக்க முடியாத ஆதாரங்களுடன் விசாரணை செய்ய முடியாது என்று தெளிவாக கூறப்பட்டது. மேலும், 12.11.2011 தேதியிட்ட அறிக்கையானது, முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டு இரண்டு நாட்களுக்கு பிறகு விசாரணை அதிகாரியால் ஆரம்ப விசாரணை அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டது, இது எந்தவொரு சூழ்நிலையிலும் முன்பிணை விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு முரணான நிரூபிக்கப்பட்ட ஆதாரமாக கருத முடியாது. 30.11.2017 தேதியிட்ட உத்தரவின் 3 வது பத்தியில் உயர்நீதிமன்றம் பதிவு செய்த கருத்து முன்பிணை கோரிய மனுவின் மேற்கூறிய பத்தியில் இருந்து வந்ததாக இருந்தாலும், உயர்நீதிமன்றம் முன்பிணை வழங்குவது முக்கியமாக பிணை கோரிக்கைக்கு இணைக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் விவரப்படி, விவாகரத்து காலத்தில் விண்ணப்பதாரர் தனது மனைவியுடன் உடலுறவு கொண்டதாகக் காட்டப்படவில்லை. இதன் விளைவாக, இ.த.ச பிரிவு 377 இன் கீழ் தண்டிக்கப்படும் குற்றம் தொடர்பான குற்றச்சாட்டு ஆதாரபூர்வமானது அல்லது ஆதாரமற்றது என்பதை மதிப்பீடு செய்ய முடியவில்லை. மேலும், கணவன்–மனைவி இருவரும் திருமணத்திற்குப் பிறகு மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே ஒன்றாக வசித்து வந்ததைக் கருத்தில் கொண்டு, கணவருக்கு இடைக்கால முன்பிணை வழங்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, இந்த அடிப்படையில் இறுதி முன்பிணை வழங்க முடிவு செய்ததாகவும் உயர்நீதிமன்றம் பதிவு செய்தது. ஆகையால், உயர் நீதிமன்றம் கூறிய இரு அடிப்படைகளும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 340 உடன் படிக்கப்பட்ட பிரிவு 195 (1)(பி) இன் கீழ் வழக்குத் தொடங்குவதற்கு போதுமானதாக இருக்காது என்பது தெளிவாகிறது. [பத்தி 10] [408–பி–எ:ப்]

1.2 தற்போதைய வழக்கில் உண்மைகளின் படி, உயர்நீதிமன்றம் எந்த வொரு ஆதாரத்தையும் பரிசீலனை செய்யவில்லை ஏன்னென்றால் பரிசீலனை செய்ய தகுந்த ஆதாரம் இல்லை. மேலும், விசாரணை அதிகாரியான காவல்துறை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட முதல் நிலை விசாரணை அறிக்கையினையும், உயர்நீதிமன்றம் வழங்கிய முன்பிணை உத்தரவினை மட்டுமே, உயர்நீதிமன்றம் கருத்தில் கொண்டுள்ளதால், அவை புறம்தள்ள இயலாத சாட்சியங்கள் அல்ல என்பதால், அவற்றிலிருந்து பொய் சாட்சியம் வழங்கப்பட்டதற்கான முதல் நோக்கு முகாந்திரம் இருப்பதாக தெளிவாக கூற இயலாது. [பத்தி 13] [409–எஃப்–எச்]

1.3 மேல்முறையிட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் என்னவென்றால், உயர்நீதிமன்றம் தன்னையே திருப்திப்படுத்தவில்லை என்றும், இந்த விஷயத்தைத் முன்னெடுத்துச் செல்வது நீதியின் நலனுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதை திருப்திப்படுத்தவில்லை. அத்தகைய காண்முடிவுகள் பதிவு செய்யப்பட்டன. எவ்வறாயினும், அது அவ்வாறு செய்யப்பட்டிருக்க கூடாது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல், அமர்வு நீதிமன்ற உத்தரவை குறைத்து மதிப்பீடு செய்தது தொடர்பாக மேல்முறையீட்டளர் வழக்கறிஞரின் வாதத்தால் ஈர்க்கப்படவில்லை. எதிர்த்துரைக்கப்பட்ட உத்தரவானது உயர்நீதிமன்றதால் தள்ளுபடி செய்யப்பட்டது. [பத்தி 15, 16] [410–சி–டி]

சர்வபள்ளி ராதாகிருஷ்னன் பல்கலைக்கழகம் மற்றும் ஒருவர் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர் 2019 **எஸ்சிசி ஆன்லைன் எஸ்சிசி 51 – வேறுப்படுத்திக்காட்டப்பட்டது.**

சாஜு ராம் எதிர் ராதேய் ஷியாம் (1971) 1 **எஸ்சிசி** 774: [1971] **சப்ளி. எஸ்சிஆர்** 172; *சந்திரபால் சிங் மற்றும் பிறர் எதிர் மஹாராஜா சிங் மற்றும் ஒருவர்* (1982) 1 **எஸ்சிசி** 466; *ஆர்.எஸ்.சுஜாதா எதிர் கர்நாடகா மாநிலம் மற்றும் பிறர்* (2011) 5 **எஸ்சிசி** 689 : [2010] 14 **எஸ்சிஆர்** 227 – அதனை சார்ந்துள்ளது.

கருணாகரன் எதிர் டி.வி.ஏசாரா வாரியார் மற்றும் ஒருவர் (1978) 1 **எஸ்சிசி** 18 : [1978] 2 **எஸ்சிஆர்** 209; கோவா மாநிலம் எதிர் ஜோஸ் மரியா ஆல்பேட் வேல்ஸ் என்கிற ராபார்ட் வேல்ஸ் (2018) 11 **எஸ்சிசி** 659; எம்.எஸ்.செரிப் எதிர் மெட்ராஸ் மாநிலம் **ஏஐஆர்** 1954 **எஸ்சி** 397 : [1954] **எஸ்சிஆர்** 591; எச்.எஸ்.பேடி எதிர் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 2015 **எஸ்சிசி ஆன்லைன் டெல்** 9524 – **அதில் குறிப்பிடப்பட்டது.**

<u>வழக்கின் சட்டக்குறிப்பு</u>

[1971] சப்ளி. எஸ்சிஆர் 172	**சார்ந்துள்ளது**	**பத்தி 7**
(1982) 1 எஸ்சிசி 466	**சார்ந்துள்ளது**	**பத்தி 8**
[2010] 14 எஸ்சிஆர் 227	**சார்ந்துள்ளது**	**பத்தி 9**
[1978] 2 எஸ்சிஆர் 209	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 11**
(2018) 11 எஸ்சிசி 659	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 13**
[1954] எஸ்சிஆர் 1229	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 13**
[2014] 1 எஸ்சிஆர் 591	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 14**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீட்டு எண்.387/2019.

பம்பாய் உயர்நீதிமன்றத்தின் 07.03.2018 தேதியிட்ட குற்றவியல் மனு எண். 728/2017 இல் வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு அமைந்துள்ளது.

திருமதி.அமிர்தா பான்டா, நைல் சாட்டர்ஜி, திபேஷ் பான்டா ஆகியோர் மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்கறிஞர்கள்.

நிலேஷ் ஓஜா, விஜய் குமார், ஆர்.சி.சர்மா, மாரிஸ் பரவீர் சஹே ஆகியோர் எதிர்மனுதாரர்களுக்கான வழக்கறிஞர்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.எஃப். நாரிமன் அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. பம்பாய் உயர்நீதிமன்றம் கடந்த 07.03.2018 அன்று வழங்கிய தீர்ப்பிலிருந்து இந்த வழக்கு எழுந்துள்ளது. அந்த தீர்ப்பில், குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 340 இன் கீழ் பொய் சாட்சியம் அளித்ததற்காக வழக்கிற்கு முதல் நோக்கு முகாந்திரம் இருப்பதாகவும், நீதியின் நலனை கருத்தில் கொண்டு, இந்த மேல்முறையீட்டாளரை குற்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென உயர் நீதிமன்றத்திற்கு தோன்றியுள்ளது.

3. திருமண உறவு தொடர்பான வழக்கில், மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் முன்பிணை மனு தாக்கல் செய்யப்பட்டதில், முன்வைக்கப்பட்டுள்ள பொருண்மைகள் தொடர்பாக இந்த வழக்கு எழுந்துள்ளது. அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முன்பிணை மனுவைப் பொறுத்தவரை, மேற்கூறிய மனுவில் மனுதாரர்கள் கீழ்க்கண்டவற்றை குறிப்பிட்டுள்ளனர்:

> "8. சில முன்னேற்றங்களால் கடுமையான துன்பத்திற்கு முதலாம் மனுதாரர் ஆளாக்கப்பட்டதால், அவரது மாமியார் நசீம் குரேசியால், தனது மகளிடம் பேசி புரிய வைக்க இயலும் என்பதாலும், அதனால், தங்களது உறவு மேம்படும் என்பதால், இந்த விடயத்தில் அவரை தலையிடுமாறு அணுகியுள்ளார். எனினும், பல குடும்ப உறுப்பினர்களின் தலையீட்டிற்குப் பின்னும் சனாவின் நடவடிக்கைகளில் எந்த மாற்றமும்

ஏற்படவில்லை. இந்நிலையில், சனா மாகிமில் வசிக்கும் வாசிம் ஷேக் என்பவருடன் தொடர்பில் இருப்பதாக வெளிச்சத்திற்கு வந்துள்ளது. முதலாவது மனுதாரரிடம், சனாவின் குடும்பத்தினர், மேற்சொன்ன உறவு குறித்து தங்களுக்கு தெரியும் என ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேலும், சனாவுடனான முதலாவது மனுதாரரின் திருமணத்திற்கு முன்பிருந்தே, அந்த தொடர்பு இருந்து வந்ததாகவும் எனினும், வாசிம் ஷேக் வேறு சமூகத்தை சார்ந்தவர் என்பதால், அவருடன் அந்த உறவை ஏற்கவில்லை எனவும், சனாவை கட்டாயப்படுத்தி முதலாவது மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்ததாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

11. மேலும், கடந்த 29 அக்டோபர் 2016 அன்று முதலாவது மனுதாரர் சனாவை அழைப்பதற்காக, சனாவின் தாய் வீட்டிற்கு சென்ற போது, அவர் வாசிம் ஷேக் உடன் தொடர்பில் இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார். மேலும், அந்த நிகழ்வுகளானது சனாவின் குடும்பத்தினருக்கு தெரிந்தே நிகழ்ந்துள்ளது என்பதை அறிந்தும், அவர்கள் தங்களது மகளின் தவறான உறவு முறையை தடுப்பதற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், அவர் மேலும் அதிர்ச்சி அடைந்துள்ளார். அதன் பிறகு மனுதாரர்கள், புகார்தாரர் மற்றும் அவரது குடும்பத்தினரிடம், அந்த தவறான உறவு முறை, திருமணத்தின் புனிதத்திற்கு எதிராக உள்ளதால் அது தொடர்வதை ஏற்க இயலாது என்றும், வாசிம் ஷேக் உடனான உறவை சனா நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும், தனது திருமண உறவை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும் எனவும், தெளிவுபடுத்தியுள்ளார்கள். எனினும், அதை பின்பற்ற மறுத்து,

கடந்த நவம்பர் 2016 ஆம் ஆண்டு, தனது திருமண வீட்டிலிருந்து பல்வேறு பொருட்களை எடுத்துக்கொண்டு சனா வெளியேறியுள்ளார். "

மேற்சொன்ன வாக்குமூலங்கள் அமர்வு நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோது, அவை பொய்யானவை என்று தெரிந்தே, சாதகமான உத்தரவை பெற வேண்டும் என்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ளதாக, அமர்வு நீதிமன்றத்தில் வாதிடப்பட்டுள்ளது. அமர்வு நீதிமன்றம் கடந்த 12.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு முன்வைத்துள்ளது.

"குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபர்கள் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 323, 376(பி), 377, 406, 498 ஏ, 504 மற்றும் 506 உடன் இணைந்து 34 மற்றும் வரதட்சனை தடுப்புச் சட்டம், 1961 பிரிவுகள் 3 மற்றும் 4 இன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையானது கடந்த 19.11.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதுநாள் வரை நீதிமன்றத்தின் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்பதால், 1 முதல் 7 வரையுள்ள எதிரிகளுக்கு எதிராக நடவடிக்கை துவங்கப்படவில்லை. அரசுத்தரப்பு சாட்சியங்களும், எதிரி தரப்பில் சாட்சியங்கள் ஏதேனும் இருந்தால், அவையும் பதிவு செய்யப்படவேண்டும். சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், இருதரப்பினருக்கும் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். அதன்பிறகே எதிரிகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா அல்லது பொய்யா என்பதை

கண்டறிய இயலும். தற்பொழுது 1 முதல் 7 வரையிலான எதிரிகள், முன்வைத்துள்ள முரண்பட்ட வாக்கியம் நீதிமன்றத்தின் முன்பு உள்ளது. இப்பொழுது அதன் உண்மைதன்மை தீர்மானிக்கப்படவில்லை. சத்திய பிரமாணத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தின் முன்பு பொய்யான பொருண்மைகளை முன்வைப்பது, தண்டனைக்குரிய செயல் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. எனினும், அதன்பொருட்டு எதிரிகள் பொய்யான வாக்குமூலங்களை முன்வைத்துள்ளார்கள் என முடிவெடுக்கப்படவேண்டும். தற்போதைய சூழலில் முரண்பாடான வாக்குமூலங்களை முன்வைத்துள்ளார்கள் என்பதற்காக மட்டும் எதிரிகளை தண்டிக்க இயலாது, மேலும் பாதிக்கப்பட்ட நபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்படும் வரை குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 340 இன் கீழ் நடவடிக்கை துவங்க இயலாது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது முன்கூட்டியே தாக்கல் செய்யப்பட்ட ஒன்றாகும்."

4. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முன்பிணை மனுவில் அதே வாக்குமூலங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கடந்த 24.11.2017 அன்று விசாரணை அதிகாரி, ஒரு அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என உயர்நீதிமன்றம் கண்டறிந்து, முன்பிணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என பதிவு செய்துள்ளது. மேலும், இரண்டாவது எதிர்மனுதாரர் மேற்சொன்ன மனுவில் பொய்யான வாக்குமூலங்களை முன்வைத்துள்ளதாக நீதிமன்றத்திற்கு தோன்றியுள்ளதால், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 340

உடனிணைந்து பிரிவு 195(1)(பி) கீழான புகார் வழங்குவதற்கு வழக்கு மூலம் உள்ளது எனவும், மேலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டு, ஆள்வரையறை கொண்ட நீதித்துறை நடுவரால், விசாரணை செய்யப்படவேண்டுமென கண்டறியப்பட்டுள்ளது. மேலும், உயர்நீதிமன்றம், கடந்த 30.11.2017 அன்று வழங்கப்பட்ட உத்தரவின் மூன்றாவது பத்தியை மேற்கோள் காட்டி அதிலும், மேற்சொன்ன குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் முன்பிணை வழங்கியும், உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5. மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. அம்ரிடா பாண்டா, விசாரணை அறிக்கையானது, விசாரணை அதிகாரியால், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட இரண்டு நாட்கள் கழித்து மேற்கொள்ளப்பட்ட முதல் நிலை விசாரணையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகவும், மேலும், முன்பிணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குமூலங்கள் பொய்யானவை என எதுவும் கண்டறியப்படவில்லை என வாதம் செய்துள்ளார். மேலும், கடந்த 30.11.2017 அன்று உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவில் மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் முன்வைத்ததிலிருந்தே அந்த குற்றச்சாட்டுகள் பொய்யானவை என பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், முன்பிணை வழங்கப்பட்ட காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. அதற்கு அப்பாற்பட்ட காரணங்களினாலே முன்பிணை வழங்கப்பட்டுள்ளது எனவும், மாவட்ட அமர்வு நீதிமன்றம் கடந்த 12.02.2018 அன்று வழங்கிய உத்தரவின் அடிப்படையில் முற்று பெற்ற நடவடிக்கைகளை எதிர்மனுதாரர் மறைத்துள்ளது தவறு எனவும் வாதிட்டுள்ளார். மேலும், எதிர்மனுதாரர் உயர்நீதிமன்றத்தை சுத்தமான கரங்களுடன் அணுகவில்லை என்பதால்,

உயர்நீதிமன்றத்தின் எதிர்த்துரைக்கப்பட்ட உத்தரவானது தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என வாதிட்டு, அதற்கு ஆதரவாக சில தீர்ப்புகளையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

6. முதலாவது எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. நிலேஷ் ஓஜா, மேற்சொன்ன வாதத்தை மறுத்து வாதிட்டார். எதிர்மனுதாரர் பொருண்மைகளை மறைத்துள்ளதாக முன்வைக்கப்பட்ட வாதத்தினை எதிர்கையில், உயர்நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்பிணை மனுவிற்கு பின்னரே, அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், உயர்நீதிமன்றத்தில் பிப்ரவரி 8 மற்றும் 9 ஆம் தேதிகளில் வாதங்கள் முடிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். அதன் காரணமாக கடந்த 12.02.2018 தேதியிட்ட உத்தரவானது உயர்நீதிமன்றத்தின் பார்வைக்கு எடுத்து வைக்கப்படவில்லை என வாதிட்டுள்ளார். மேலும், அமர்வு நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்பிணை மனு தனியானது மற்றும் சுயாதீனமானது எனவும், அதை அமர்வு நீதிமன்றம் விசாரித்தது என்றும், உயர்நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்பிணை மனு தனியானது எனவும், அதன் காரணமாக உயர்நீதிமன்றம் தனிப்பட்ட முறையில் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 340க்கான முகாந்திரம் இருக்கிறதா என்பது தொடர்பாக தீர்வு காணலாம் என வாதிட்டுள்ளார். அதற்கு ஆதரவாக சில தீர்ப்புகளையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

7. இந்நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் சட்டப் பிரிவு 340 இன் கீழ் நடவடிக்கையை மேற்கொள்வதற்கான சட்ட வழிமுறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சார்ஜு ராம் எதிர் இராதே ஷியாம் (1971) 1 எஸ்சிசி

774, என்ற தீர்ப்பின் ஏழாவது பத்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> "7....பொய்யான சாட்சியம் வழங்குவதும், பொய்யான வாக்குமூலம் வழங்குவதும், ஒரு தவறான செயல் என்பதும், கட்டாயமாக அவற்றை கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை, எனினும், உடனுக்குடனும், அடிக்கடியும் பொய் சாட்சியம் வழங்கியதற்காக முறையான காரணங்கள் இன்றியும், உறுதிப்படுத்தப்படாத ஆவணங்களிலிருந்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், அது தோல்வியை ஏற்படுத்தும். தவறிழைத்தவர்களை தண்டிக்க வேண்டும் என்ற நீதியின் நலனை கருத்தில் கொண்டே நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமேயல்லாமல், ஒரு வாக்கியம் முரண்பாடாக இருப்பதனால் மட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படக்கூடாது, ஏனெனில் அறியாமையால் அல்லது தகுந்த ஆவணங்கள் இன்றி மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும். ஒரு முக்கியமான பொருண்மையை வேண்டுமென்றே பொய்யாக முன்வைத்ததற்கு அடிப்படை இருந்து, நீதிமன்றத்தின் பார்வையில் குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய அடிப்படை காரணிகள் இருந்தால் மட்டுமே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்."

8. *சந்திரபால் சிங் மற்றும் பலர்*, எதிர் *மகாராஜ் சிங் மற்றும் ஒருவர்* (1982) 1 எஸ்சிசி 466, என்ற தீர்ப்பின் 14 வது பத்தியில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு முன்வைத்துள்ளது.

" 14. சட்டப்பிரிவு 199 இன் கீழான குற்றச்சாட்டு பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளது. சட்டத்திற்குட்பட்டு சாட்சியமாக பெறப்படக்கூடிய ஒரு உறுதிமொழி ஆவணத்தில் பொய்யான பொருண்மைகளை முன்வைப்பதற்கான தண்டனையை சட்டப்பிரிவு 199 வழங்குகிறது. வாடகையை கட்டுப்படுத்தும் அலுவலரின் முன்பு ஒரு வளாகத்தினை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளில் தாக்கல் செய்யப்பட்ட வாக்குமூலம் சாட்சியமாக பெறக்கூடிய ஒன்று என அனுமானித்து கொள்வோம். அந்த வாக்குமூலத்தில் சில பொருண்மைகள் பொய்யாக முன்வைக்கப்பட்டுள்ளதாக புகார் வழங்கப்பட்டுள்ள போதிலும், இந்த நோக்கத்திற்காக புகாரில் அது குறித்து குறிப்பிட்டு முன்வைக்கப்படவில்லை. ஒரு நீதிமன்றத்திலோ அல்லது ஒரு அரசு அலுவலர் முன்போ அல்லது வேறு நபர்கள் முன்னிலையிலோ, சாட்சியமாக பெறப்படக்கூடிய வாக்குமூலத்தில் பொய்யான பொருண்மைகளை முன்வைத்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டால், அந்த பொய்யான பொருண்மையை குறிப்பிட்டு, அது எவ்வாறு பொய் என்பதை முன்வைத்து, அது தொடர்பான உண்மை எந்த ஆவணத்தில் உள்ளது என்பதை முன்வைத்து அந்த இரண்டு காரணிகளும் ஒரே நேரத்தில் நிலையக்கத்தக்கதல்ல என்பதை குறிப்பிட்டு அதன் காரணமாக தனக்கு தெரிந்து அது பொய் என முன்வைக்க வேண்டும். ஒன்றை நிரூபணம் செய்ய வேண்டிய கட்டாயத்தில், வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர் கருத்துக்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலோ அல்லது மறுக்கப்பட்டாலோ அதை அடிப்படையாக கொண்டு மட்டும்,

இதச பிரிவு 199 இன் கீழ் குற்றம் சுமத்த இயலாது. அதை விவரிப்பதற்கு, முதலாவது மேல்முறையீட்டாளர் திரு. சந்திர பால்சிங், வளாக எண் 385/2 இல் உள்ள ஒரு அறையினை தான் அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். அனைத்து எதிர் கருத்துக்களையும் பரிசீலனை செய்த கற்றறிந்த கூடுதல் மாவட்ட நீதிபதி அந்த பொருண்மையை ஏற்கவில்லை. அதனால், அது பொய்யான பொருண்மை என்றாகிவிடாது. தொடர்புடைய சாட்சியங்களை கருத்தில் கொண்டதிலிருந்து, சந்திரபால் சிங்கால் முன்வைக்கப்பட்டுள்ள பொருண்மையானது, நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை என மட்டுமே, கருத இயலும். ஒரு சாட்சியத்தை ஏற்றுக்கொள்வதாலோ அல்லது நிராகரிப்பதால் மட்டுமே, நிராகரிக்கப்பட்ட ஒன்று பொய்யானது என அளவுகொள்ள இயலாது. பொய்யான வாக்கியத்தை மேற்கொள்ளும் நபரின் அறிவிற்கு தெளிவாக உண்மை தெரியும் பட்சத்தில் மட்டுமே தினந்தோறும் நீதிமன்றத்தில் ஒரு தரப்பினரின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டும், எதிர் தரப்பினரின் கூற்று நிராகரிக்கப்பட்டும் வருகிறது. இவ்வாறான அனைத்து வழக்குகளிலும் இதச பிரிவு 199 இன் கீழ் புகார் அளிக்கப்பட்டால், அது பல வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதற்கு வழிவகை செய்வது மட்டுமல்லாமல், எந்தவித கேள்வியுமின்றி நீதிமன்ற நடவடிக்கைகளை தவறான முறையில் கையாள்வதாக இருக்கும். பொய் சாட்சியம் கூறுவது அதிகரித்து வருவதாகவும், நீதிமன்றங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனில் அத்தகைய நபர்களை விமர்ச்சிக்காவிட்டால், நீதித்துறை

நடவடிக்கைகள் கேலிக்குள்ளாக்கப்படும் என எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் எங்களிடம் கூறியுள்ளார். அவர் முன்வைத்துள்ளது சரியென நாங்கள் கருதுகிறோம். எனினும் அதற்கு இணையாக ஏமாற்றத்திற்குள்ளான வழக்கறிஞர்கள் அவர்களின் ஏமாற்றத்தினை குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கைகளின் மூலம், ஏமாற்றத்தை சீர்ப்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படக் கூடாது என்பது உண்மையாகும். இங்குள்ள புகார்தாரர் ஒரு வழக்கறிஞர் ஆவார். வாடகை நிர்ணயம் தொடர்பான நடவடிக்கைகளில், இரண்டு நீதிமன்றங்களிலும் அவர் தோல்வியைச் சந்தித்து, தற்போது குற்றவியல் நீதிமன்றத்திற்கு விரைந்துள்ளார். அந்த பொருண்மை மட்டுமே, பலவற்றை பேசுகிறது. கூடுதலாக, அந்த தரப்பினர்களிடையே 1975 முதல் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த பின்னனியில் குற்றவியல் நீதிமன்றத்தின் ஆள்வரையறையை அணுகுவது என்பது சட்ட நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்துவது ஆகும் என முடிவு எட்டப்படுவதையும், மேலும், இந்த முக்கியமான பொருண்மையை குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 482 இன் கீழ் தனது அதிகாரத்தை பயன்படுத்தும் போது, உயர்நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறியுள்ளது என முடிவு எட்டப்படுவதையும், தவிர்க்க இயலாது. "

9. மேற்சொன்ன இரண்டு தீர்ப்புகளும், *ஆர்.எஸ்.சுஜாதா* எதிர் *கர்நாடக அரசு மற்றும் பலர்*, (2011) 5 எஸ்சிசி 689 (15 மற்றும் 16 வது பத்திகள்) என்ற தீர்ப்பில் மேற்கோள் காட்டப்பட்டு, அங்கீகாரத்தோடு அணுகப்பட்டுள்ளது. அந்த இரண்டு தீர்ப்புகளிலும்,

முன்வைக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு இந்த நீதிமன்றம் கீழ்க்கண்ட முடிவை எட்டியுள்ளது.

> "18. மேற்சொன்னவற்றிலிருந்து, நீதிமன்றத்திலிருந்து சாதகமான உத்தரவை பெற வேண்டி, ஒரு தரப்பு வேண்டுமென்றே பொய் சாட்சியம் வழங்கியுள்ளதாக நீதிமன்றம் கருதக்கூடிய முக்கியமான சந்தர்ப்பங்களில் மட்டும் நீதிமன்ற அவமதிப்பு/விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ள பட வேண்டும் என்பது உறுதியாகிறது. அந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு, சந்தேகத்தை விட உயர்வான காரணிகள் அமைய வேண்டும். மேலும், பொய் சாட்சியம் வழங்கப்பட்டதற்கான சந்தேகத்தைவிட, அதற்கு தனித்துவமான சாட்சியங்கள் இருக்க வேண்டும். மேலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டு, குற்றம் இளைக்கப்பட்டுள்ளதாக கூறுவது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமா என நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். "

10. இந்த தீர்ப்புகளை பரிசீலனை செய்ததிலிருந்து, மறுத்துரைக்க இயலாத ஒரு சாட்சியத்தோடு ஒப்பிட்டு பார்க்கையில், ஒரு பொருண்மை பொய்யானது என கண்டறியப்படக்கூடும் என்ற நிலையில், அந்த பொருண்மையை, பொய்யானது என தெரிந்தே கூறப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இந்த வழக்கை பொறுத்தமட்டில் சாட்சியம் வழங்கப்படாத காரணத்தினால், மறுத்துரைக்க இயலாத சாட்சியத்தோடு, முன்பிணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மைகளை சோதிக்க இயலாது. மேலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததிலிருந்து இரண்டு

நாட்களுக்கு பிறகு கடந்த 12.11.2011 அன்று விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட விசாரணை அறிக்கையானது ஒரு முதல் நிலை அறிக்கையே என்பதால், அவற்றை முன்பிணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மாறுபட்ட பொருண்மைகளுக்கு, மறுத்துரைக்க இயலாத சாட்சியம் என்று கருத இயலாது. மேலும், மேல்முறையீட்டாளருக்காக, முதன்மையான கற்றறிந்த வழக்கறிஞர் சரியாக குறிப்பிட்டுள்ளது போல, கடந்த 30.11.2017 தேதியிட்ட உயர்நீதிமன்ற உத்தரவின் மூன்றாவது பத்தியில், மேற்சொன்ன முன்பிணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மைகள் எடுத்துரைக்கப்பட்ட போதிலும், முதல் தகவல் அறிக்கையில், மனைவியும் மனுதாரரும் பிரிந்து வாழ்ந்த காலத்தில் உடலுறவு கொண்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படாததால், இதச பிரிவு 377 இன் கீழான குற்றத்தன்மை, அதில் இல்லை என்ற காரணத்தினால் முன்பிணை வழங்குவதாக உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. மேலும், திருமணத்திற்கு பிறகு கணவனும், மனைவியும் மிக குறுகிய காலமே ஒன்றாக வசித்து வந்துள்ளதாலும், கணவருக்கு இடைக்கால முன்பிணை வழங்கப்பட்டுள்ளதாலும், அதனடிப்படையில் முன்பிணை வழங்குவதாக உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. எனவே, உயர்நீதிமன்றம் கூறிய இரண்டு காரணங்களும், குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 340 உடன் இணைந்து சட்டப்பிரிவு 195(1)(பி) இன் கீழான நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு அது போதுமானது அல்ல என்பது தெளிவாகிறது.

11. எனினும், முதலாவது எதிர்மனுதாரருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் பல்வேறு தீர்ப்புகளை குறிப்பிட்டுள்ளார். *கே.கருணாகரண்* எதிர் *டி.வி. ஏச்சர வாரியர் மற்றும் ஒருவர்*, (1978) 1 எஸ்சிசி 18 என்ற தீர்ப்பில், இந்த நீதிமன்றம் குற்றவியல் நடைமுறைச்

சட்டம், 1973, அத்தியாயம் XXVI ஐ மேற்கோள் காட்டி, ஒரு வாக்கியம் வேண்டுமென்றோ அல்லது நோக்கத்தோடோ குறிப்பிடப்பட்டாலே, அது பொய் என்று மீண்டும் கூறப்பட்டுள்ளது. (பார்க்க: பத்தி 23 மற்றும் 30). குற்றவியல் நடவடிக்கைகளை துவங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கு விசாரணை என்பதால், அதில் இரண்டு கோணங்களுக்கும் சாத்திய கூறு உள்ளது என்றால், நீதியின் நலனை கருத்தில் கொண்டு அந்த உத்தரவில் தலையிட தேவையில்லை. (பத்தி 26).

12. *சர்வே பள்ளி இராதா கிருஷ்ணன் பல்கலைகழகம் மற்றும் ஒருவர்* எதிர் *ஒன்றிய அரசு மற்றும் பலர்,* 2019 எஸ்சிசி ஆன்லைன் எஸ்சி 51, என்ற தீர்ப்பில் அந்த வழக்கின் பொருண்மைகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, இந்நீதிமன்றம், நடுவண புலனாய்வு துறையின் இயக்குநரால், குறிப்பிடப்படும் மூத்த அதிகாரியின் தலைமையில் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் இரண்டு மருத்துவர்களை உறுப்பினர்களாக கொண்ட உயர் மட்டக்குழுவை அமைத்து அந்த பொருண்மைகளை ஆராய உத்தரவிடப்பட்டிருந்தது. மேற்சொன்ன தீர்ப்பின் 8 மற்றும் 9 வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அந்த குழு பல பொருண்மைகளை திரட்டி, தீர விசாரணை செய்த பிறகு ஒரு தீர்மானமான முடிவிற்கு வந்துள்ளது. அந்த சூழலில், குழுவின் அறிக்கையை பரிசீலனை செய்து, அந்த கல்லூரி நீதிமன்றத்திலிருந்து சாதகமான உத்தரவை பெற வேண்டும் என்பதற்காக, வெட்கமும் பயமும் இன்றி பதிவுகளை உருவாக்கியுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. அந்த குழுவின் மேற்சொன்ன கண்டுபிடிப்புகளின் அடிப்படையில்தான், அந்த கல்லூரி முற்றிலும் புனையப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பொய்யான அறிக்கையை குறிப்பிட்டுள்ளார்கள் என்பதை தெளிவாக

கண்டறிய முடிந்தது. இந்த வழக்கில் புனையப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லாததாலும், ஒரு தனித்து செயல்படும் உயர்மட்ட குழுவினால் அந்த பொருண்மைகள் தொடர்பாக விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படாததால், மேற்சொன்ன தீர்ப்பிற்கும், இந்த வழக்கிற்கும் பெரிய வேறுபாடுகள் உள்ளது. எனவே, அந்த வழக்கானது, இவ்வழக்கின் பொருண்மைகளிலிருந்து வேறுபடுத்தக்கூடிய ஒன்றாகும்.

13. அடுத்தபடியாக, *கோவா அரசு* எதிர் *ஜோஸ் மரிய ஆல்பர்ட் வேல்ஸ் என்ற இராபர்ட் வேல்ஸ்*, (2018) 11 எஸ்சிசி 659 என்ற தீர்ப்பை 1ஆம் எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் குறிப்பிட்டு அதன் 34 ஆவது பத்தியை மேற்கோள் காட்டியுள்ளார். *எம்.எஸ். செரிப்* எதிர் *மெட்ராஸ் மாநிலம்,* ஏஐஆர் 1954 எஸ்சி 397 என்ற பிரபலமான தீர்ப்பினை சார்ந்து, அந்த 34ஆம் பத்தி அமைந்துள்ளது. மேலும், இந்த வழக்கில் உயர்நீதிமன்றமானது சாட்சியங்களை உன்னிப்பாக பரிசீலனை செய்துள்ளதாலும், போதுமான காரணிகள் உள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாலும், நீதித்துறை மனப்பான்மையின் அடிப்படையில் பிரிவு 340 இன் கீழான நடவடிக்கை தேவையான ஒன்று என முடிவு எட்டக்கூடும் என்பதாலும், பிரிவு 340 இன் கீழான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என அதில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பொருண்மைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சாட்சியங்கள் எதுவும் இல்லாததால், உயர்நீதிமன்றம் சாட்சியங்களை ஆராயவில்லை. மேலும், விசாரணை அதிகாரியான அதுவும் காவல்துறை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட முதல் நிலை விசாரணை அறிக்கையையும் மற்றும் உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட முன்பிணை உத்தரவை மட்டுமே உயர்நீதிமன்றம் பரிசீலனை செய்துள்ளது. அவை எதுவும் மறுத்துரைக்க இயலாத சாட்சியம் அல்ல

என்பதால் அவற்றிலிருந்து பொய் சாட்சியம் வழங்கப்பட்டதற்கான முதல் நோக்கு முகாந்திரம் இருப்பதாக தெளிவாக கூற இயலாது. இந்த தீர்ப்பும் எதிர்மனுதாரரின் வழக்கை மேற்கொள்ள வழிவகுக்கவில்லை. அடுத்தபடியாக, *பெருமாள்* எதிர் *ஜானகி,* (2014) 5 எஸ்சிசி 377 என்ற தீர்ப்பில் குறிப்பாக, 20 ஆவது பத்தியை எதிர்மனுதாரர் மேற்கோள் காட்டி, சட்டப்பிரிவு 195 இன் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ள உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் மட்டுமல்லாமல், அதை தகுந்த வழக்கில் கையாள வேண்டிய கடமையையும் கொண்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். அந்த கருத்தை புறம் தள்ள இயலாது என்ற போதும், இந்த வழக்கானது, அப்படியொரு தகுந்த வழக்கு அல்ல என்று நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

14. அதன் பிறகு, கற்றறிந்த வழக்கறிஞர், *எச்.எஸ். பேடி* எதிர் *இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்*, 2015 எஸ்சிசி ஆன்லைன் டெல் 9524 என்ற டெல்லி உயர்நீதிமன்ற தீர்ப்பை மேற்கோள் காட்டி அதில், தற்போதைய சூழலில் நீதிமன்றங்கள் சந்திக்கும் அன்றாட பிரச்சனைகள் தொடர்பாகவும் மற்றும் நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்படும் தவறான பிரமாண பத்திரங்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் வழங்கப்பட்டுள்ள சில விளக்கங்களை சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால், மேலே கண்டவாறு, இந்த வழக்கோடு அது குறைவான தொடர்பையே கொண்டுள்ளது.

15. நீதியின் நலனை கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று, மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரால் முன்வைக்கப்பட்டுள்ள வாதம் சரியானதாக தோன்றவில்லை. அதற்கான பொருண்மைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் அந்த

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடாது என நாங்கள் தீர்மானிக்கிறோம். மேலும், மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்தாது தொடர்பான மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞரின் வாதத்தில் எங்களுக்கு நாட்டம் ஏற்படவில்லை.

16. அதன் முடிவாக, மேல்முறையீடானது அனுமதிக்கப்பட்டு, உயர்நீதிமன்றத்தின் எதிர்த்துரைக்கப்பட்ட தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டது.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."